# 67

# கிறிஸ்துவை சிலுவையில் அறைதல்

## [27:32–56]

இயேசு இந்த பூமியில் தமது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான வேளை வந்திருந்தது, மனிதகுலத்தின் பாவங்களுக்காகப் பலியாகுதல் என்பதே அந்த நோக்கமாக இருந்தது (காண்க 20:28). பலர் மன்னிக்கப்படும்படியாக அவர் தமது இரத்தத்தை ஊற்றவிருந்த இடத்திற்கு அவரைப் போர்வீரர்கள் வழிநடத்திச் சென்றனர்.

போர்வீரர்கள் கொல்கொதாவை அடைந்தபோது, அவர்கள் இயேசுவைச் சிலுவையில் ஆணியடித்தனர். அவர் யூதர்களின் இராஜாவாக இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டார். இயேசு அந்த வழியே நடந்து சென்றவர்களால், யூதத்தலைவர்களால், மற்றும் அவருக்கு இருபக்கங்களிலும் தொங்கிக் கொண்டிருந்த கள்வர்களாலும் வேதனைப் படுத்தப்பட்டார். கடைசியில் இயேசு தமது ஆவியை ஒப்புக் கொடுத்தார்.

இயேசு சிலுவையில் தொங்கிய வேளையிலும் அவரது மரண வேளையிலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட பல நிகழ்வுகள் நடந்தன: மூன்று மணிநேரம் இருள், ஒரு பூமியதிர்ச்சி, பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுதல் மற்றும் தேவாலயத்தின் திரைச்சீலை கிழிதல் ஆகியவை.

### சிலுவைக்குப் பயணம் (27:32)

**32போகையில், சிரேனே ஊரானாகிய சீமோன் என்னப்பட்ட ஒரு மனுஷனை அவர்கள் கண்டு, அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி அவனைப் பலவந்தம் பண்ணினார்கள்.**

**வசனம் 32.** இயேசு தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு சென்றார் (யோவான் 19:17). சிலுவை என்பதற்கான (*stauros*) சொற்றொடானது கிடைமட்டக் குறுக்குக் கட்டையை (*patibulum*) மாத்திரமே குறித்து நிற்கலாம், அடிக்கடி சித்திரிக்கப் படுவது போன்று, இது செங்குத்துக் கட்டையை (*stipes*), உள்ளடக்குவதில்லை.[1] இயேசு சுமந்து செல்ல வேண்டியிருந்தது போன்ற பலவீனமான சூழ்நிலையில், ஒரு நபர் சுமந்து செல்ல முழு சிலுவை மிகவும் கனமானதாக இருந்திருக்க வேண்டும்.

ஆக்கினைக்குத் தீர்க்கப்பட்டவர் தமது சிலுவையின் ஒரு பகுதியைச் சுமந்து செல்லுதல் வழக்கமாக இருந்தது. கிரேக்க வரலாற்றாளரான புளூட்டார்க் அவர்கள், "மரணதண்டனை பெறச் செல்லும் ஒவ்வொரு

குற்றவாளியும் தனது சொந்த சிலுவையைத் தனது முதுகில்தான் சுமந்து செல்ல வேண்டும்" என்று எழுதினார்.[2]

இயேசுவும் போர்ச்சேவர்களும் எருசலேமை விட்டு **வெளியே வந்தபோது**, அவர் சிலுவை மரக் கட்டையின் பாரத்தை இனியும் தாங்க இயலாதவராக இருந்திருக்க வேண்டும் என்பது உறுதி. அவர் இரவு முழுவதும் விழித்திருந்தார் மற்றும் உணவு அல்லது பானம் எதையும் பெற்றிருக்கச் சாத்தியம் இல்லாதிருந்தது. அவர் சகித்துக் கொண்ட கடுமையான அடிகளினால் கணிசமான அளவு இரத்தத்தை அவர் இழுந்த போயிருந்தார். இயேசு தமது சிலுவையின் பாரத்தினால் கீழே விழுந்தார் என்று எந்த சுவிசேஷ எழுத்தாளரும் எழுதவில்லை, உண்மையில், அவரது பலவீனமான நிலையில் இருக்கும் எவரொருவரும் கீழே சாயாமல் சிலுவை மரக்கட்டையை வெகுதூரம் சுமந்து செல்ல இயலாது என்று நினைத்தல் நியாயமானதாகவே உள்ளது.

இதற்குப் பதில்செயலாகப் போர்வீரர்கள், **சீமோன் என்னப்பட்ட ஒரு மனுஷனை அவர்கள் கண்டு, அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி அவனைப் பலவந்தம் பண்ணினார்கள்.** ரோமப் போர்வீரர்கள் தங்கள் சுமைகளை ஒரு மைல் தூரம் சுமந்து வரும்படி யூதர்களைப் பலவந்தம் பண்ண அதிகாரம் கொண்டிருந்தனர். இந்த நடைமுறை, ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம்வரப் பலவந்தம்பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ என்ற இயேசுவின் கூற்றிற்குப் பின்னால் உள்ளது (5:41ன் மீதான விளக்கங்களைக் காணவும்).

சீமோன் என்பவர், எகிப்திற்கு மேற்கில், வடக்கு ஆப்பிரிக்காவில் இருந்த **சிரேனே** என்ற ஊரில் இருந்து வந்தவராக இருந்தார். பெருமளவிலான யூத மக்கள் கூட்டம் ஒன்று இரு ஏற்பாடுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் சிரேனே ஊரில் குடியமர்ந்திருந்தது.[3] சபை நிலைநாட்டப்பட்ட பெந்தெகொஸ்தே நாளில் சிரேனே ஊரில் இருந்தும் யூதர்கள் எருசலேமுக்கு வந்திருந்தனர் என்று அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகம் கூறுகிறது (நடபடிகள் 2:10). சிரேனே மற்றும் பிற இடங்களில் இருந்து எருசலேமுக்கு இடம்பெயர்ந்த யூதர்கள் அங்கு ஒரு ஜெப ஆலயத்தை உண்டாக்கினர் என்றும் நடபடிகள் புத்தகம் கூறுகிறது (நடபடிகள் 6:9). சீமோன் தாமே, பஸ்காவை ஆசரிப்பதற்காக எருசலேமுக்கு வந்திருந்த யூதத் திருப்பயணியாக இருந்திருக்கலாம், அல்லது அவர் இந்த நகரில் தமது குடும்பத்தினருடன் குடியமர்ந்திருக்கலாம். சீமோன், "நாட்டிலிருந்து அவ்வழியே வருபவராக" மற்றும் "அலெக்சந்தருக்கும் ரூப்புக்கும் தகப்பனுமாகியவர்" என்று மாற்கு சுட்டிக்காண்பித்தார் (மாற்கு 15:21; காண்க லூக்கா 23:26). அவர்கள் மாற்கு சுவிசேஷத்தின் வாசகர்களால் புரிந்துகொள்ளப்படாதிருக்கும் பட்சத்தில் அவர்களை அங்கு அவர் (மாற்கு) குறிப்பிடுவாரா? ரோமர் 16:13ல் பவுல் ஒரு ரூபைப்பற்றிப் பேசினார், மற்றும் இவர் மாற்குவினால் குறிப்பிடப்பட்ட அதே மனிதராக இருக்கச் சாத்தியக்கூறு உள்ளது.

## இடம் (27:33, 34)

**33 கபாலஸ்தலம் என்று அர்த்தங்கொள்ளும் கொல்கொதா என்னும் இடத்துக்கு அவர்கள் வந்தபோது,**

**[34]கசப்புக்கலந்த காடியை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள்; அவர் அதை ருசிபார்த்து, குடிக்க மனதில்லாதிருந்தார்.**

***வசனம் 33.*** *சிலுவையில் அறைப்பட்ட இடம்* ***கொல்கொதா*** *என்று அழைக்கப்பட்டது, இது அரமாயிக் மொழியில்* ***கபாலஸ்தலம்*** *அல்லது "மண்டை ஒடு" என்பதற்கான சொல்லாக உள்ளது (லூக்கா 23:33). இருளான மற்றும் தவிர்க்கப்படும் இவ்வார்த்தை Calvaria என்ற ("கல்வாரி") இலத்தீன் வார்த்தைக்கு இணையானதாக உள்ளது.*

*இயேசுவின் மரணம் நிகழ்ந்த மிகச்சரியான இடம் ஒருக்காலும் அறியப்படாது இருக்கலாம். இந்த இடம் நகரத்தின் மதில்களுக்கு வெளியே இருந்தது என்று வேதவசனங்கள் குறிப்பிடுகின்றன (எபிரெயர் 13:12). இது யூதர்களின் பிரமாணத்தைக் கடைப்பிடித்தலாக இருந்தது (லேவியராகமம் 24:14; எண்ணாகமம் 15:35; காண்க 1 இராஜாக்கள் 21:13; நடபடிகள் 7:58).*

*இன்றைய நாட்களில் எருசலேவுக்குச் செல்பவர்களுக்கு, கொல்கொதா இருந்திருக்கக் கூடிய இடம் என்று இரு இடங்கள் காண்பிக்கப் படுகின்றன. கத்தோலிக்க மார்க்கம், ஹோலி செப்பல்ச்சர் என்று அழைக்கப்படும் இடத்தின் உள்ளே கட்டப்பட்டுள்ள சபைக்கட்டிடத்தின் உள்ளே இருக்கும் பாறையை கொல்கொதா என்று அடையாளப்படுத்துகிறது. இந்த வடிவமைப்பு தொடக்க காலத்தில், கி.பி. நான்காம் நூற்றாண்டில் கான்ஸ்ட்டன்டைன் என்ற பேரரசரால் கட்டப்பட்டது. இந்த இடம் கிறிஸ்துவின் காலத்தில் எருசலேமின் மதில்களுக்கு வெளியே இருந்திருக்கும். அருகில் உள்ள பல கல்லறைகள் முதல் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்கலாம்.*

*புரொட்டஸ்டன்டு பாரம்பரியம் ஒன்று, கோர்டனின் கல்வாரி என்று அறியப்பட்டுள்ள மலை ஒரப்பகுதியைச் சுட்டிக்காண்பிக்கிறது. குன்றின் ஒரத்தில் உள்ள பாறையின் வடிவம் மனித மண்டை ஒட்டைப் போன்றதாக உள்ளது. 1800 களில் பல மனிதர்களால் இந்த இடம் முன்மொழியப்பட்டது, ஆனால் இது பிரட்டிஷ் இராணுவத்தின் புகழ்பெற்ற வீரரான சார்லஸ் ஜார்ஜ் கோர்டன் அவர்களால் பிரபலப் படுத்தப்பட்டது. இருப்பினும் குன்றின் தோற்றம் பிந்திய புதைபொருள் ஆராய்ச்சித் தோண்டுதல்களால் ஏற்பட்டதாக இருக்கலாம்; முதல் நூற்றண்டில் இது மண்டை ஒட்டப் போன்று காணப்படாதிருக்கலாம். இத்துடன் கூடுதலாக, புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள், தோட்டக் கல்லறை உட்பட அருகில் உள்ள கல்லறைகள் கி.மு. எட்டு அல்லது ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்று கணக்கிட்டுள்ளனர்.[4]*

***வசனம் 34.*** *கொல்கொதாவுக்குச் சென்று சேர்ந்தபின், சிலுவையில் அறைவதற்குப் பொறுப்பு ஒப்புவிக்கப்பட்டிருந்த போர்வீரர்கள், இயேசுவுக்கு* ***கசப்புக்கலந்த காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள்.*** *"கசப்பு" என்பதற்கான (cholē) கிரேக்க வார்த்தை, கசப்புச் சுவையுள்ள ஒரு பொருளைக் குறிக்கிறது (காண்க சங்கீதம் 69:21). மாற்கு 15:23ம் வசனம், திராட்சரத்தில் "வெள்ளைப்போளம்" கலந்து கொடுக்கப்பட்டதாகக் கூறுகிறது.*

*ரோமப்போர்வீரர்கள் இயேசுவுக்கு இந்த வேளையில் திராட்ச ரசத்தைக் கொடுத்தது ஏன்? (1) அவர்கள் அவரை இன்னமும் அதிகமாக ஏளனம் செய்தார்களா? புத்துணர்வூட்டும் பானம் ஒன்றை அவருக்குக் கொடுப்பதற்குப்*

*பதிலாக, கசப்பான பானம், ஒன்றை அவருக்குத் தர அவர்கள் விரும்பினார்களா? அனேகமாக இல்லை என்றே கூறலாம். (2) போதை தருதல் என்ற விளைவைக் கொண்டிருந்த அந்த பானம், உண்மையில் அவரது வேதனைகளையும் பாடுகளையும் நீட்டித்ததா? அவரது பாடுகளை வலுப்படுத்த அவர்கள் நாடினார்களா? இதுவும் காரணமாக இருந்திருக்க முடியாது. (3) தரப்பட்ட திராட்சரம் என்பது, இயேசுவின் உணர்வுகளை மழுங்கச் செய்து வேதனையை அவர் தாங்க உதவும் மனிதப்பண்புள்ள செய்கையாக இருந்ததா? இயேசு சிலுவையில் அறையப்படுவதற்குச் சற்றுமுன்னர் அது அவருக்குத் தரப்பட்டது. இது ஒரு நல்ல காரணமாக இருந்திருக்கக் கூடும். இந்த கடைசி விளக்கம் தல்மூத்தில் பாதுகாக்கப் பட்டுள்ள பாரம்பரியம் ஒன்றுடன் இணைவாக உள்ளது: "ஒருவர் மரண தண்டனை பெறும்படி கூட்டிச்செல்லப்படும்போது, அவரது உணர்வுகளை மழுங்கச் செய்வதற்காக அவருக்கு வாசனைப்பொருளின் துகள் சேர்க்கப்பட்ட திராட்சரம் ஒரு பாத்திரத்தில் தரப்படுகிறது ... எருசலேமில் இருந்த கனத்திற்குரிய பெண்கள் இதை நன்கொடையாகக் கொண்டு வருதல் வழக்கமாக இருந்தது."[5]*

*கசப்புக்கலந்த காடியை இயேசு* ***ருசிபார்த்து, குடிக்க மனதில்லாதிருந்தார்.*** *அவர் அனேகமாக, தாம் பானம்பண்ணவிருந்த பாடுகளின் பாத்திரத்தைத் தாம் முழுமையாக ருசிபார்க்கக் கூடும்படிக்கு, இந்தக் கசப்பான பாத்திரத்தைப் பானம் பண்ண மறுத்திருக்கலாம் (26:39 க்கான விளக்கவுரையைக் காண்க).*

## *சிலுவையில் அறையப்பட்ட விதம் (27:35-37)*

***[35]அவரைச் சிலுவையில் அறைந்தபின்பு, அவர்கள் சீட்டுப்போட்டு அவருடைய வஸ்திரங்களைப் பங்கிட்டுக் கொண்டார்கள். என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்பேரில் சீட்டுப்போட்டார்கள் என்று தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.***

***[36]அவர்கள் அங்கே உட்கார்ந்து, அவரைக் காவல் காத்துக்கொண்டிருந்தார்கள்***

***[37]அன்றியும் அவர் அடைந்த ஆக்கினையின் முகாந்தரத்தைக் காண்பிக்கும் பொருட்டு, இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு என்று எழுதி, அவர் சிரசுக்கு மேலாக வைத்தார்கள்.***

***வசனங்கள் 35, 36.*** *சிலுவையில் அறைதல், நாளின் மூன்றாம் மணிவேளையில் அல்லது காலை 9:00 மணிக்குத் தொடங்கிற்று (மாற்கு 15:25).* ***அவரைச் சிலுவையில் அறைந்தபின்பு,*** *என்ற சொற்றொடர் சிலுவையில் அறைதலின் முற்றான செயலில் அதைக் குறிப்பதில்லை, ஆனால் இயேசுவின் கரங்களைக் குறுக்குக் கட்டையில் ஆணியால் அறைதல், அதன் இடத்தில் அதை உயர்த்துதல் மற்றும் செங்குத்துக் கட்டையில் அவரது பாதங்களை ஆணியால் அறைதல் ஆகிய படிகளை மாத்திரமே குறிக்கின்றன.*

*சிலுவையில் அறைதல் என்பது, மரண தண்டனைக்குப் பழங்கால உலகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மிகக் கொடுமையான வடிவம் ஆகும். இது பெர்சியர்களால் பாலஸ்தீனத்தில் அறிமுகப்படுத்தப் பட்டது,*

*ஆனால் இதை ரோமர்களே பூரணப்படுத்தினர். உண்மையில் சிலுவையில் அறையப்படுதல் பற்றி சுவிசேஷப் புத்தகங்கள் விபரமாக விவரிப்பதில்லை. அப்படிப்பட்ட விஷயம் அவசியமற்றதாக இருந்தது, ஏனெனில் இந்த கொடூரமான காட்சி கிறிஸ்து மரித்த வேளையில் வாழ்ந்திருந்தவர்களுக்கு மிகவும் பழக்கமானதாக இருந்தது. இதற்கு அப்பால், சிலுவையில் அறைதலின் உடல்ரீதியான அம்சங்களை உள்ளடக்கச் சுவிசேஷ ஊழியர்கள் அடக்கம் காண்பித்திருக்க வேண்டும், ஏனெனில் அவைகள் பேச இயலாத ஆவிக்குரிய பரிமாணத்தில் இருந்து வாசிப்பவர்களைத் தடம் மாறிக் கூட்டிக் கொண்டு போகலாம் என்று அவர்கள் பயந்தனர்.*

*மேலும் சிறுமைப் படுத்துவதற்காக, ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்படுத்தப்பட்ட நபர், ஒருவேளை இடுப்பில் ஒரு துணியைத் தவிர, மற்ற எல்லா உடைகளும் உரிந்துகொள்ளப் பட்டிருக்கலாம். இயேசு வானத்திற்கும் பூமிக்கும் இடையில் தொங்கிக் கொண்டிருக்கையில், ரோமப் போர்ச்சேவர்கள்* **சீட்டுப்போட்டு அவருடைய வஸ்திரங்ளைப் பங்கிட்டுக் கொண்டார்கள்.** *அவர்கள் அவரது அங்கி, "தையலில்லாமல் மேலேதொடங்கி முழுவதும் நெய்யப்பட்டதாயிருந்தது" என்பதால் அதைப் பங்கிட விரும்பவில்லை (யோவான் 19:23, 24). இந்த அங்கியைக் குறித்துச் சீட்டுப்போடலாம் என்ற அவர்களின் தீர்மானம் சங்கீதம் 22:18ன் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றியது: "என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்பேரில் சீட்டுப்போடுகிறார்கள்."*

*பின்பு போர்வீரர்கள், ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்படுத்தப்பட்டவர்களை மீட்க எவரொருவரும் உதவி செய்யாதிருப்பதை உறுதிப்படுத்த, சிலுவையில் அறைப்பட்டவர்களைக் கண்காணித்தல் என்ற தங்கள் பணியை நிறைவேற்றக் கீழே அமர்ந்தனர். பொறுப்பேற்றிருந்த நூற்றுக்கு அதிபதி, தமது பராமரிப்பில் விடப்பட்ட குற்றவாளிகள் உண்மையிலேயே மரிக்கும் வரையிலும், அந்தக் காட்சியை மேற்பார்வை செய்வார் (மாற்கு 15:44, 45).*

***வசனம் 37.*** *ரோமர்கள் பல்வேறு வகையான சிலுவைகளைப் பயன்படுத்தினர், குறைந்த பட்சம் பின்வரும் மூன்று வடிவங்களை அவர்கள் பயன்படுத்தினர்:* T, †, and X. *இயேசுவுக்கு* **எதிராக எழுதப்பட்ட குற்றச்சாட்டை அவர் சிரசுக்கு மேலாக வைத்தார்கள்** *என்பது, அவர் பாரம்பரியமான உருவம் † கொண்ட சிலுவையில் அறையப்பட்டார் என்ற முடிவை ஆதரிக்கிறது. [அந்த குற்றச்சாட்டுக் கொண்ட] அடையாளப்பட்டி, எருசலேம் தெருக்களில் இயேசு இழுத்துச் செல்லப்பட்டபோது, இயேசுவின் கழுத்தைச் சுற்றிக் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கலாம் அல்லது அவருக்கு முன்னால் நடந்து சென்ற போர்வீரர் ஒருவரால் எடுத்துச் செல்லப் பட்டிருக்கலாம் (27:31ன் மீதான விளக்கங்களைக் காண்க). ஒரு குற்றவாளிக்கு எதிராகக் குற்றச் சாட்டுகளை விளம்பரப்படுத்தும் வழக்கம், [இனி அந்தக் குற்றம் நிகழாதிருக்க] மற்றவர்களுக்கு எச்சரிக்கையூட்டுவதாகப் பயன்பட்டது. இது நிகழ்வைக் காண்பவர்களுக்கு அச்சமூட்டி, அவர்கள் ரோமாபுரிக்கு எதிராக இதுபோன்ற குற்றங்களைச் செய்வதில் இருந்து அவர்களைத் தடுத்தது.*

*மத்தேயு சுவிசேஷத்தின்படி, இந்த அடையாளப்பட்டி,* **இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு** *என்று கூறிற்று. நான்கு சுவிசேஷங்களிலும் இதைப் பற்றிக் கூறப்பட்டிருப்பவற்றை ஒன்றிணைப்பதன் மூலம், இதில்*

*எழுதியிருந்தவற்றை முழுமையாகத் தரவழைக்க முடியும். "இது நசரேயனாகிய இயேசு, யூதர்களின் இராஜா" என்று எழுதப் பட்டிருந்தது. யூத அதிகாரிகள், "நான் யூதருடைய ராஜா" என்று அவன் சொன்னதாக எழுதும் (வலியுறுத்தம் கூட்டப்பட்டுள்ளது) என்று வார்த்தைகளை மாற்றியமைக்கும்படி பிலாத்துவை வற்புறுத்தினர்; ஆனால் அந்த மாற்றத்தை அங்கீகரிக்க மறுத்த பிலாத்து. "நான் எழுதினது எழுதினதே என்று உறுதியாக அறிவித்தார்" (யோவான் 19:21, 22).*

## *அவருடன் சிலுவையில் அறையப்பட்டவர்களும் அதிக அவமானங்களும் (27:38-44)*

***38அப்பொழுது, அவருடைய வலது பக்கத்தில் ஒருவனும் அவருடைய இடது பக்கத்தில் ஒருவனுமாக இரண்டு கள்ளர் அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்டார்கள்.***

***39அந்த வழியாய் நடந்துபோகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி:***

***40தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே ரட்சித்துக்கொள்; நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கிவா என்று அவரைத் தூஷித்தார்கள்.***

***41அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் பரியாசம் பண்ணி:***

***42மற்றவர்களை ரட்சித்தான்; தன்னைக் தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை; இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம்.***

***43தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள்.***

***44அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்ட கள்ளரும் அந்தப்படியே அவரை நிந்தித்தார்கள்.***

*வசனம் 38.* இங்கு மத்தேயு, அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்ட **இரண்டு கள்ளர்களைப்** பற்றி, முதன் **முறையாகச் சில விபரங்களை உட்செருகினார்.** லூக்கா 23:32ம் வசனம், இந்த இரண்டு குற்றவாளிகளும் எருசலேம் தெருக்களில் இயேசுவுடன் கூட இழுத்து வரப்பட்டிருந்தனர் என்று சுட்டிக்காண்பிக்கிறது. கொல்கொதா சென்று சேர்ந்தபின், **அவருடைய வலது பக்கத்தில் ஒருவனும் அவருடைய இடது பக்கத்தில் ஒருவனுமாக அவர்களும் சிலுவைகளில் அறையப்பட்டனர்.** இந்தக் காட்சியானது, பாடும்படும் ஊழியக்காரர் "அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்படுவார்" என்று உரைக்கும் ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றிற்று (ஏசாயா 53:12).

கொல்கொதாவின் காட்சி ஒரு முதன்மையான சிலுவையைச் சித்தரித்தது - ஆனால் மத்தேயு, மற்ற இருவரும் அங்கு சிலுவைகளில் அறையப்பட்டனர் என்று கூறினார். ஏதோ சில வழிகளில் இந்த மூன்று சிலுவைகளும் ஒன்றுபோலிருந்தன. அவற்றில் தொங்கிய மூன்றுபேரும், வேதனையை, மூச்சுத் திணறலை, வெப்பத்தை,தங்கள் கண்களிலும் தங்கள் காயங்களிலும்

வியர்வையை, அவமானங்களை மற்றும் பூச்சிகளின் உபத்திரவத்தைப் பட்டு அனுபவிக்க வேண்டியிருந்தது. இந்த மூன்று மனிதர்களும் இப்படிப்பட்ட பயங்கரமான, சிறுமைப்படுத்தும் மரணத்தைப் பெற்றிருப்பதைக் கண்டு அந்த வழியாகச் சென்ற மனிதர்கள் ஏளனம் செய்வதையும் சகிக்க வேண்டியிருந்தது. பெரிய வேறுபாடுகளும் இருந்தன. ஒன்று கலகம் செய்ததால் சிலுவையில் அறையப்பட்ட, மனந்திரும்பாத கள்ளனைக் கொண்டிருந்தது (லூக்கா 23:39). இரண்டாவது சிலுவை, மனந்திரும்பியவனாக, மனஸ்தாபப்படும் கள்ளனைக் கொண்டிருந்தது (லூக்கா 23:40, 41). மூன்றாவது சிலுவை, மீட்பின் சிலுவையாக, தன்மீது இயேசு கிறிஸ்து மரிப்பதைக் கொண்டதாக இருந்தது.

கிறிஸ்துவுடன் மரித்துக் கொண்டிருந்த மனிதர்கள் சிறு திருடர்கள் அல்ல. கள்வர்கள் என்பதற்கான கிரேக்கச் சொற்றொடர் (*lēistai*), தங்கள் நோக்கத்தை நிறைவேற்றப் பலாத்காரத்தையும் வன்முறையையும் பயன்படுத்தத் தயங்காதவர்கள் என்பதைக் குறிக்கிறது. உண்மையில் இவ்வார்த்தை சிலவேளைகளில், புரட்சியாளர்களைக் குறிக்கிறது. பரபாஸ் ஒரு (*lēistēs*; யோவான் 18:40); கள்ளன் என்று அழைக்கப்பட்டான்; அவன் கலகம் மற்றும் கொலை செய்ததன் நிமித்தம் சிறையில் அடைக்கப் பட்டிருந்தான் (மாற்கு 15:7). இயேசுவுடன் சிலுவைகளில் அறையப்பட்ட இரு மனிதர்களும், பரபாஸ் என்பவனால் தலைமையேற்று நடத்தப்பட்ட கூட்டத்தின் உறுப்பினர்களாக இருந்திருக்கலாம், ஏனெனில் அவர்கள் பரபாஸ் சிறையில் அடைக்கப்பட்ட அதே வேளையில் தாங்களும் சிறையில் அடைக்கப்பட்டவர்களாக இருந்தனர் (26:55ன் மீதான விளக்கங்களைக் காணவும்).

இந்த இரு கள்வர்களின் பெயர்கள் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்படவில்லை. நூற்றாண்டுகளினூடே, உண்மையாயிராவிட்டாலும், புராணங்கள் போன்ற வரலாறுகளில், இந்த ஜோடிக்கு, தீஸ்மாஸ் மற்றும் கெஸ்ட்டஸ், ஜோத்தாம் மற்றும் கம்மா, ஜோத்தாஸ் மற்றும் மக்கட்ராஸ், தீத்து மற்றும் ட்யூமாக்கஸ் ஆகியவை உட்படப் பல்வேறு வகையான பெயர்கள் குறிப்பிடப் பட்டுள்ளன.[6]

**வசனம் 39.** அந்த **வழியாய் நடந்துபோகிறவர்கள்** இயேசுவை **தூஷித்தவர்களில்** முதலாவது குழுவில் அடங்கியிருந்தனர். சிலுவை இருந்த இடம் நகரத்திற்குச் சற்று வெளியே இருந்ததால், இயேசு சிலுவையில் அறையப்பட்டதைப் பல யூதர்கள் கண்டனர். (யோவான் 19:20). அவ்வழியே கடந்து சென்றவர்கள், பஸ்கா பண்டிகைக்காக எருசலேமுக்கு வந்திருந்த திருப்பயணிகளாக இருந்திருக்க வாய்ப்புள்ளது.

இவ்வாறு கடந்துசென்றவர்கள் இயேசுவைப் பார்த்துத் **தங்கள் தலைகளைத் துலுக்கினர்.** அவர்கள் இயேசுவை ஏளனம் செய்தது சங்கீதம் 22:6, 7ன் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றிற்று:

> நானோ ஒரு புழு, மனுஷனல்ல;
> மனுஷரால் நிந்திக்கப்பட்டும், ஜனங்களால் அவமதிக்கப்பட்டும் இருக்கிறேன்.
> என்னைப் பார்க்கிறவர்களெல்லரும் என்னைப் பரியாசம்பண்ணி,
> உதட்டைப் பிதுக்கி, தலையைத் துலுக்கினர்.

*வசனம் 40.* *இந்த மக்கள்,* ***தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே ரட்சித்துக்கொள்; நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கிவா*** *என்று கூறினர். அவர்களின் மொழியானது முந்திய நிகழ்வுகளைச் சுட்டிக்காண்பித்தது. முதலாவது அவர்கள், இயேசுவின் உரிமைகோருதலை நினைத்துப் பார்த்தனர். தேவாலயத்தை அவர் முதலாவது சுத்தம் செய்கையில், "இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள். மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்" என்று அவர் கூறியிருந்தார் (யோவான் 2:19). அவரது கூற்றைப்பற்றி யூதர்கள் ஒரு பிறழ்வான விளக்கத்தை, ஒருவேளை மூன்று ஆண்டுகளாகத் தங்கள் சிந்தைகளில் காத்துக்கொண்டிருந்தனர். யூதர்கள் அவரை விசாரிக்கையில், பொய்ச்சாட்சிகள் அவரது வார்த்தைகள் பற்றிய தங்கள் குழப்பமான கண்ணோட்டத்தை குறிப்பிட்டு அவருக்கு எதிராகப் பேசினர் (26:60, 61ன் விளக்கங்களைக் காணவும்). யூதத்தலைவர்கள் மக்களை இயேசுவுக்கு எதிராகத் தூண்டுவதற்காக, அவர்கள் மத்தியில் இந்தத் தவறான குற்றச்சாட்டைப் பரப்பியிருந்தனர் என்பது உறுதி. இரண்டாவது, இயேசு தம்மைத் தாமே (நீ தேவனுடைய குமாரனானால்) நிரூபித்தல் என்பதற்கான அறைகூவலானது, வனாந்தரத்தில் இயேசு சாத்தானால் சோதிக்கப்பட்டதன் எச்சமாக உள்ளது (4:3, 6ன் விளக்கங்களைக் காணவும்). இந்த வேளையில், கடந்து சென்றவர்கள் இயேசுவைத் தேவனுடன் அவர் கொண்டுள்ள உறவை, பலத்த வல்லமை ஒன்றைக் காட்சிப்படுத்தி நிரூபிக்கும்படி இடித்துக் கூறினர். இதற்கு நேர்மாறாக, அவர் சிலுவையில் தொங்கியதே அவர் தேவனுடைய குமாரன் என்பதைக் காட்சிப்படுத்திற்று. அவர் பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தவராக நிலைத்து நின்றார் (எபிரெயர் 5:7-9).*

***வசனம் 41.*** *இயேசுவை நோக்கி ஏளனங்களைச் சுழற்றி வீசிய இரண்டாவது* ***குழுவில் பிரதான ஆசாரியரும் மூப்பரும் அடங்கியிருந்தனர்.*** *இந்தப் பட்டியல், எருசலேமில் இருந்த தலைவர்களால் இயேசு முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டிருந்தார் என்பதை உறுதிப்படுத்துகிறது. சிலுவையில் அறையப்பட்ட வேளையில் இந்தச் சிறுகுழு அங்கிருந்த விஷயமானது, மதநிறுவனம் இயேசுவின்மீது கொண்டிருந்த கோபம் மற்றும் வெறுப்பு ஆகியவற்றின் ஆழத்தைச் செயல்விளக்கப் படுத்துகிறது.[7]*

***பரியாசம் பண்ணி*** *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (empaizō வில் இருந்து வந்த) மற்றொரு பிள்ளையை ஏளனம் செய்யும் பிள்ளைகள் போன்று செயல்படுதல் என்ற கருத்தைக் கொடுக்கிறது.[8] ஆவிக்குரிய வகையில் யூதர்களிலேயே மிகவும் பக்குவமானவர்களாக இருந்திருக்க வேண்டிய இந்த முதிய மனிதர்கள், முரண்பாடான வகையில் ஒழுக்கமற்ற குழந்தைகள் போல் நடந்துகொண்டனர்! இயேசுவை இரவில் விசாரித்த வேளையில், அவர் மீது துப்பி, அவரைத் தங்கள் கைமுட்டிகளால் அடித்து, அவரை அறைந்து, குற்றவாளிகளின் நடத்தையையும் நடந்து காண்பித்திருந்தனர் (26:67, 68).*

*இந்த மனிதர்கள் இயேசுவின் மரணத்திற்கு மிகவும் பொறுப்பாளிகளாக, அவரை முப்பது வெள்ளிக்காசுக்காக ஒப்புக்கொடுக்கும்படி யூதாஸிடம் பேரம் பேசியவர்களாக இருந்தனர் (26:14-16). இவர்களே இயேசுவுக்கு எதிராகப் பொய்க்குற்றச்சாட்டுகளைக் கொண்டுவந்து அவர் மரணத்துக்குப் பாத்திரர் என்று அறிவித்தவர்களாகவும் இருந்தனர் (26:57-68; யோவான் 19:7). இவர்கள்*

*இயேசுவைச் சிலுவையில் அறையும்படி பிலாத்துவை வற்புறுத்தி அவரைச் சிலுவையில் அறையுமாறு கூவும்படி யூதக் கூட்டத்தைத் தூண்டியவர்களாகவும் இருந்தனர் (27:20-25). மனிதக் கண்ணோக்கில், இவர்கள் இல்லாமல் இயேசு, சிலுவையில் அறையப்பட்டிருக்க மாட்டார். இருந்தபோதிலும் இயேசு, இவர்களின் நயவஞ்சகமான சூழ்ச்சிக்குத் தம்மை ஒப்புக்கொடுத்து, சிலுவையை ஒரு பலிபீடமாக மாற்றியதன் மூலம், சிலுவையை தேவனுடைய நித்தியதிட்டத்தின் வரிசையில் கொண்டுவந்தார் (காண்க நடபடிகள் 2:23, 24).*

***வசனம் 42.*** *யூதத்தலைவர்கள்* ***மற்றவர்களை ரட்சித்தான்; தன்னைத் தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை*** *என்று கூறி இயேசுவை ஏளனம் செய்தனர். அவர்கள், இயேசு தமது ஊழியத்தின் போது நிகழ்த்தியிருந்த அற்புதங்களை ஏளனம் செய்தனர். இந்த பலத்த செய்கைகள், தேவனுடைய உலகத்தில் துன்புற்றுக் கிடந்தவர்களுக்கு அவரது ஆறுதலை வெளிப்படுத்தின. இதற்கும் மேலாக, இவைகள் கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்ற வகையில் இயேசுவின் அடையாளத்தைச் சுட்டிக்காண்பிக்கும் வல்லமை நிறைந்த அடையாளங்களாக இருந்தன (11:2-6; யோவான் 20:30, 31).*

*இன்னமும் இயேசு அற்புத வல்லமையைக் கொண்டிருந்தார் என்பதிலும், தாம் சிலுவையை எதிர்த்திருந்தால், தமது சொந்த உயிரைக் காத்துக்கொள்வதற்கு அந்த வல்லமையை அவர் பயன்படுத்தி இருக்க முடியும் என்பதிலும் சந்தேகம் எதுவும் இல்லை. தேவனுடைய சித்தத்தைக் காத்துக்கொண்டு இருப்பதில், அவர் பாடுகள் மற்றும் மரணம் ஆகியவற்றின் பாத்திரத்தில் பானம்பண்ணத் தாமே ஒப்புக்கொடுத்தார். அவர் மனித இனத்தைப் பாவத்தில் இருந்து இரட்சிக்கச் செய்ய வேண்டும் என்றால், அவர் தம்மைத் தாமே இரட்சித்துக் கொள்ளக் கூடாதிருந்தது. இயேசுவின் செயலற்ற தன்மையை யூதத்தலைவர்கள் இயலாமையாக எடுத்துக்கொண்டனர்.*

*கொடூரமான மனிதர்கள் இயேசு இஸ்ரவேலின் இராஜாவாக இருப்பதாக சுடுசொல்லில் ஏளனமாகக் கூறி ஒப்புக்கொண்டனர். அவர் விசாரிக்கப்படுகையில் பிரதான ஆசாரியரான காய்பா அவரை, "நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா?" என்று கேட்டார் (26:63). பிற்பாடு பிலாத்து இயேசுவை, "நீ யூதருடைய ராஜாவா?" என்று கேட்டிருந்தார் (27:11). இவ்விரு விஷயங்களிலும் இயேசு உறுதிப்பாட்டுப் பதிலுரையைக் கொடுத்திருந்தார் (26:64; 27:11). அரசத்துவத்திற்கான இந்த உரிமை கோருதல், இயேசுவைப் போர்வீரர்கள் ஏளனம் செய்த நிகழ்விலும் (27:28-31) அவரது தலைக்கு மேல் தொங்கிய குற்றச்சாட்டிலும் பிரதிபலித்தது: "இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு" (27:37).*

*தொடர்ந்து, யூதத்தலைவர்கள், "இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம்" என்று கூறினர். அவர்கள் "அவரை இகழ்ந்து" பேசினர் (லூக்கா 23:35). இயேசு, தாம் யாராக இருக்கிறார் என்பதற்கு ஏற்கனவே போதுமான அளவு வல்லமையைக் காட்சிப்படுத்தி இருந்தார், இருப்பினும் அவர்கள் அவரைப் புறக்கணித்திருந்தனர். அவர் சிலுவையில் இருந்து இறங்கி வந்திருந்தால், அவர்கள் அவரைக் குறித்துத் தவறாக எடைபோட்டிருந்ததை ஒப்புக்கொள்வதற்கு மாறாக, இன்னொரு விளக்கத்தைக் கொடுத்து இருப்பார்கள். இயேசு, சிலுவையில் தமது மரணத்தினால், தேவனுடைய*

*நித்திய திட்டத்தை நிறைவேற்றியது மாத்திரமின்றி, தமது சொந்த போதனையின் உதாரணம் ஒன்றையும் கொடுத்தார் (10:38, 39; 16:24-26ன் மீதான விளக்கங்களைக் காண்வும்).*

**வசனம் 43.** மேலும் அவர்கள் **தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும்** என்றும் கூறினர். அவர்களின் குற்றச்சாட்டு சுத்தமான தேவதூஷணமாக இருந்தது. இந்த மொழிநடை "கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் இவனை விடுவிக்கட்டும்; இவன்மேல் பிரியமாயிருக்கிறாரே, இப்பொழுது இவனை மீட்டுவிடட்டும்" (NIV).[9] என்று கூறுகிற சங்கீதம் 22:8க்கு இணையாக உள்ளது. யூதத்தலைவர்கள், தேவனுடைய குமாரனாக இருப்பதாக இயேசுவின் உரிமை கோருதல் மீது பழிதூற்றுதலை வீசிக்கொண்டிருந்தனர் (26:63, 64). அவர்கள், தேவன் அவர்மீது பிரியமாயிருந்தால், அவரை இரட்சித்திருப்பார் என்று கற்பனை செய்தனர்.[10] கிறிஸ்து என்ன செய்துகொண்டிருந்தார் என்பதைப் பற்றிய அவர்களின் புரிந்துகொள்ளுதல் எவ்வளவு சிறியதாக இருந்தது!

கும்பலில் இருந்த மற்ற ஏளனக்காரர்கள் இயேசுவை நோக்கி நேரடியாகப் பேசிய வேளையில், யூதத்தலைவர்கள் அவ்வாறு செய்யவில்லை. அவர்களின் வார்த்தைகள் பற்றிய மூன்று சுவிசேஷ விபரங்களிலும், அவரைப்பற்றி அவர்கள் ஒருவர் மற்றவரிடத்தில் தான் பேசிக்கொண்டனர் - இயேசுவினிடத்தில் பேசவில்லை (27:41-43; மாற்கு 15:31, 32; லூக்கா 23:35).

**வசனம் 44. அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்ட கள்ளர்கள்** ஏளனக்காரர்களின் மூன்றாவது குழுவாக இருந்தனர்.[11] முதலில் இயேசுவை ஏளனம் செய்வதில் அவ்விருவரும் இணைந்து ஈடுபட்டனர், **அந்தப்படியே அவரை நிந்தித்தார்கள்.** அவர்களில் ஒருவன், "நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள்" என்று கூறினான் (லூக்கா 23:39).

ஒரு கள்வனின் இருதயத்தில் ஏற்பட்ட மாற்றத்தை மத்தேயு விவரிக்காது இருந்தாலும், லூக்கா 23:40-43ல் அதைச் செய்தார். அவனுடைய மனதை மாற்றியது எது என்று நமக்குக் கூறப்படுவதில்லை, ஆனால் அவனது மாற்றம் உண்மையான மனந்திரும்புதலைக் கொண்டு வந்தது. இயேசு, தம்மை அவமானப்படுத்தியவர்களுக்காகவும் தமக்கு மரண ஆக்கினை செய்தவர்களுக்காகவும் தேவனிடத்தில் ஜெபித்ததை (லூக்கா 23:34) கேள்விப்பட்டதால் அவன் ஆழமாகப் பாதிக்கப்பட்டிருக்கலாம். ஒருவேளை அவன், மரணத்தின் எதிர்முகத்தில் இயேசுவின் நடத்தையினால் அசைக்கப் பட்டிருக்கலாம். காரணம் எதுவாக இருந்தாலும், அவன் ஏற்றுக்கொள்ளும் இருதயத்திற்கும் கடின இருதயத்திற்கும் இடையிலான வேறுபாட்டைச் செயல்விளக்கப்படுத்தினான். அவன், "ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்" என்று கூறினான் (லூக்கா 23:42). இயேசு, "இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்" என்று பதில் அளித்தார் (லூக்கா 23:43).

# சிலுவையில் அறையப்படுதலின் முடிவும் அத்துடன் இணைந்த அடையாளங்களும் (27:45-54)

***45*ஆறாம்மணி நேரமுதல் ஒன்பதாம்மணி நேரம்வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று**

***46*ஒன்பதாம்மணி நேரத்தில் இயேசு: ஏலி! ஏலீ!லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்.**

***47*அங்கே நின்றவர்களில் சிலர் அதைக்கேட்டபொழுது: இவன் எலியாவைக் கூப்பிடுகிறான் என்றார்கள்.**

***48*உடனே அவர்களில் ஒருவன்ஓடி, கடற்காளானை எடுத்து, காடியில் தோய்த்து அதை ஒரு கோலில் மாட்டி, அவருக்குக் குடிக்க கொடுத்தான்.**

***49*மற்றவர்களோ: பொறு, எலியா இவனை இரட்சிக்க வருவானோ, பார்ப்போம் என்றார்கள்**

***50*இயேசு, மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டார்.**

***51*அப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது, பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தது.**

***52*கல்லறைகளும் திறந்தது, நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது.**

***53*அவர் உயிர்தெழுந்தபின்பு, இவர்கள் கல்லறைகளைவிட்டுப் புறப்பட்டு, பரிசுத்த நகரத்தில் பிரவேசித்து, அநேகருக்குக்காணப்பட்டார்கள்.**

***54*நூற்றுக்கு அதிபதியும், அவனோடேகூட இயேசுவைக் காவல்காத்திருந்தவர்களும், பூமியதிர்ச்சியையும் சம்பவித்த காரியங்களையும் கண்டு, மிகவும் பயந்து: மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றார்கள்.**

***வசனம் 45.*** *இயேசு பிலாத்துவுக்கு முன்பாக ஏறக்குறைய காலை 6:00 மணியளவில் விசாரிக்கப் பட்டார், மற்றும் சிலுவையில் அறையப்படுதல் ஏறக்குறைய 9:00 மணியளவில் நடைபெற்றது (27:1, 35ன் மீதான விளக்கங்களைக் காணவும்).* ***ஆறாம்மணி நேரமுதல் ஒன்பதாம்மணி நேரம்வரைக்கும் பூமியெங்கும்அந்தகாரம் உண்டாயிற்று.*** *“ஆறாம் மணி நேரம்” என்பது மதியம் 12:00 மணியைக் குறிக்கிறது, மற்றும் “ஒன்பதாம் மணி நேரம்” என்பது மாலை 3:00 மணியைக் குறிக்கிறது. சிலுவையின் மீது இயேசு ஆறு மணி நேரம் தொங்கினார். அதில் மதியம் தொடங்கி, மூன்று மணி நேரம், பூமியை இருள் சூழ்ந்தது. “சூரியன் இருளடைந்தது” என்பதால் பூமியில் இருள் சூழ்ந்தது என்று லூக்கா எழுதினார் (லூக்கா 23:45). “இருளடைந்தது” என்று மொழிபெயர்க்கப்பட்ட (ekleipō) கிரேக்க வார்த்தை, “தவறுதல்” அல்லது “செத்துப்போகுதல்” என்று அர்த்தப்படுகிறது. இது* “eclipse” *என்ற நமது வார்த்தைக்குப் பின்னால் நிற்கிறது. இருப்பினும் இந்த இருளானது, சாதாரண சூரிய கிரகணத்தின் விளைவாக இருக்கவில்லை, அது பஸ்கா*

காலமாக இருந்ததாலும் சந்திரன் தனது பூரண உருவத்தில் இருந்ததாலும், அன்று கிரகணம் ஏற்பட்டிருக்க முடியாது. சூரியனும் சந்திரனும் ஒரு கிரகணம் ஏற்படுத்த இயலாத அளவுக்கு மிகவும் தொலைவில் இருந்தன. இந்த நிகழ்வு இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு நிகழ்வாகவே இருந்திருக்க வேண்டும். வேதாகமத்திற்குப் புறம்பேயுள்ள பழங்காலத்து ஆதாரமூலங்கள் இதைப் பற்றியும் இயேசுவின் மரணவேளையில் நடந்த மற்ற நிகழ்வுகளைப் பற்றியும் பேசுகின்றன.[12] குறிப்பாக தொடக்ககால சபை எழுத்தாளரான தெர்த்துல்லியன் என்பவர் பின்வருமாறு விளக்கம் அளித்தார்:

> சூரியன் தனது உச்சநண்பகல் வெளிச்சம் கொண்டு பிரகாசிக்க வேண்டிய அதே மணிவேளையில் பகலின் வெளிச்சம் பின்வாங்கிற்று. இது கிறிஸ்துவைப் பற்றி முன்னுரைக்கப் பட்டிருந்தது என்று அறியாதவர்கள், இது ஒரு கிரகணம் என்றே நினைத்திருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. *உங்கள் வளைவுப்பதிப்புகளில் நீங்களே உலக நிகழ்வு பற்றிய இந்த விபரத்தைக் கொண்டிருக்கிறீர்கள்* (வலியுறுத்தம் கூட்டப்பட்டது).[13]

மத்தேயு சுவிசேஷத்தில் விளக்கப்படுத்தப் படாதிருந்தாலும், அந்த நாளின் இருளானது ஒரு அடையாளத்துவ அர்த்தம் கொண்டிருக்க வேண்டும். தேவனுடைய பரிசுத்த தன்மை வெளிச்சத்தினாலும் பொல்லாங்கு இருளினாலும் (1 யோவான் 1:5) குறிக்கப்படுவதால் இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த வேளையில் பூமியில் மூன்று மணிநேரம் இருள் உண்டாயிற்று என்ற உண்மையானது, அவர் இந்த உலகத்தின் பாவங்களைச் சுமத்தலுடன் சில உறவைக் கொண்டிருக்க வேண்டும். வேத வசனங்களில், இருள் என்பது புலம்பல் மற்றும் நியாயத்தீர்ப்பு ஆகியவற்றுடனும் இணைவுபடுத்தப் பட்டுள்ளது (ஏசாயா 5:30; 13:9-11; யோவேல் 3:14, 15; ஆமோஸ் 8:9). மனிதகுலம் தனது எல்லாப் பொல்லாங்கிற்காகவும் பெறத்தக்க தண்டனையானது சிலுவையில் கிறிஸ்துவின் மீது சுமத்தப்பட்டது (ஏசாயா 53:5, 6, 10, 11; 2 கொரிந்தியர் 5:21; கலாத்தியர் 3:13; 1 பேதுரு 2:24; 3:18; 1 யோவான் 2:2; 4:10). இயேசு மரித்த நாள் மனித வரலாற்றிலேயே மிகவும் இருளான நாளாக இருந்தது என்பதில் வியப்பெதுவும் இல்லை!

**வசனம் 46. ஒன்பதாம் மணி நேரத்தில்** அதாவது மாலை 3:00 மணியளவில், **இயேசு: ஏலி! ஏலி! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்.** யூத வாசகர்களுக்கு மத்தேயு எழுதினார் என்றாலும், அவர்கள் யாவரும் எபிரெய (அரமாயிக்) மொழியில் தேர்ந்தவர்களாக இருந்திருக்க மாட்டார்கள். ஆகவே அவர் இந்தக் கூற்றை, ஏறக்குறைய ஒவ்வொருவராலும் புரிந்துகொள்ளப் பட்ட பொதுவான மொழியான கிரேக்குவில் மொழிபெயர்த்தார். வேதனையுள்ள இந்தக் கதறுதல், **என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்** என்று அர்த்தப்படுகிறது. சங்கீதம் 22:1ல் இருந்து இயேசு மேற்கோள் காண்பித்தார். இந்த மேசியாத்துவ சங்கீதத்தின் மற்ற குறிப்புகள் இந்த அதிகாரத்தில் ஏற்கெனவே தோன்றியுள்ளன (27:39, 43 வசனங்கள் மீதான விளக்கங்களைக் காணவும்).

சிலுவையில் இருந்து இயேசு கூறியவற்றில் இந்தக் கதறுதல் மாத்திரமே மத்தேயு மற்றும் மாற்கு ஆகிய சுவிசேஷப் புத்தகங்களில் பதிவுசெய்யப் பட்டுள்ளது. மத்தேயு 27:46ம் வசனத்தில், “என் தேவனே” என்பதற்கான *ஏலி*

என்ற எபிரெய வார்த்தை அடங்கியுள்ளது, அதே வேளையில் மாற்கு 15:34ல் *எலோயீ* என்ற அரமாயிக் மொழித் தரவழைப்பு உள்ளது. லூக்கா மற்றும் யோவான் ஆகிய சுவிசேஷங்கள் ஒவ்வொன்றும், தத்தமக்கே உரித்தான மற்ற மூன்று கூற்றுக்களைக் கொண்டுள்ளன (லூக்கா 23:34, 43, 46; யோவான் 19:26, 27, 28, 30), ஆக மொத்தம் ஏழு கூற்றுக்கள் சிலுவையில் இயேசுவினால் கூறப்பட்டன.

மத்தேயு மற்றும் மாற்கு ஆகிய சுவிசேஷங்களில் உள்ள இயேசுவின் இவ்வார்த்தைகள் எவ்வாறு விளக்கம் அளிக்கப்பட வேண்டும்? தேவன் உண்மைமையிலேயே இயேசுவைக் கைவிட்டுவிட்டாரா? அவர்கள் அவ்வளவு அதிகமாக ஒரே தெய்வீக ஆவியைப் பகிர்ந்து கொண்டுள்ள நிலையில் அவரால் இயேசுவைக் கைவிட முடியுமா? இந்தக் கேள்வி பல ஆண்டுகளாக விவாதிக்கப்பட்டுள்ளது. இயேசு தம்மை மனிதரும் தெய்வீகமானவருமாகிய இரட்டை இயல்பைக் கொண்டிருந்ததால், மனிதராயிருந்த இயேசுவை விட்டு மாத்திரம் தேவன் புறம்பே திரும்பினார் என்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்தக் கண்ணோட்டம் சாத்தியமற்றதாகக் காணப்படுகிறது. மற்றவர்கள், அவர் தம் மனித பண்பின் உணர்வுகளை வெளிப்படுத்தினார், ஆனால் உண்மையில் அவர் கைவிடப்படவில்லை என்கின்றனர். அவர் கைவிடப்பட்ட தமது உணர்வை வெளிப்படுத்துவதற்காக, சங்கீதம் 22:1ன் வார்த்தைகளை அவர் மேற்கோள் காண்பித்திருக்கக் கூடும் என்று முன்மொழிகின்றனர்.

தேவன் இயேசுவைக் கைவிடுதல் எவ்வாறு சாத்தியம் என்பதை விளக்கி உரைத்தல் கடினமானதாக இருந்தாலும், தேவன் உண்மையிலேயே இயேசுவைக் கைவிட்டிருக்க வேண்டும். அந்தப் பிரிவை அறிவிப்பதற்கு இயேசு வேதனையில் கதறினார். அவர் தமது பரலோக பிதாவினிடத்தில் இருந்து நித்தியத்திற்கும் முதல் மற்றும் ஒரே முறையாக அதை அனுபவித்தார். குமாரன் மனிதகுலத்தின் பாவத்தைத் தம்மீது எடுத்துக்கொண்ட போது, பிதாவானவர் தமது பின்புறத்தைத் திருப்பினார். ஏதோ ஒரு வழியில் மற்றும் ஏதோ ஒரு வகையில், தேவனும் மனிதனுமானவர், சிலுவையில் சற்றுச் சுருக்கமான நேரம் தேவனிடத்தில் இருந்து பிரிக்கப்பட்டார். இந்த வேளையில், "தம்மீது விசுவாசம் கொள்வோரின் பாவத்திற்காக இணையற்ற கிருபையான, பாவமில்லாத குமாரன்மீது பிதாவானவரின் உக்கிர கோபம் ஊற்றப்பட்டது."[14]

இயேசுவின் கதறுதல் இழப்பினால் ஏற்பட்டதாக மாத்திரமல்ல, ஆனால் அது நம்பிக்கை வைத்தல் மற்றும் நம்பிக்கை ஆகியவற்றினால் ஏற்பட்டதாகவும் இருந்தது. அப்படிப்பட்ட ஒரு கைவிடுதலுக்குப் பின்பு இயேசு, "*என்* தேவனே" என்று கதறினார். அவர் தம்மை நிறைவாக மீட்கக் கூடிய ஒருவர் மீது நம்பிக்கை வைத்தலை விட்டு ஒருக்காலும் வெளியேறவில்லை. சிலுவையில் இயேசு பயன்படுத்திய சங்கீதம் 22ன் வார்த்தைகள் யாருக்குரியவையோ, அவர் [தாவீது] தேவனுடைய விடுதலையைக் கொண்டாடும் வெற்றிக்குறிப்பு ஒன்றுடன் அந்த சங்கீதத்தை முடித்தார் என்பதை உணர்ந்தறிதல் முக்கியமானதாகும். உண்மையில் சங்கீதம் 22:22ம் வசனம் எபிரெயர் 2:12ல் கிறிஸ்துவின் கூற்று என்ற வகையில் குறிப்பிடப்பட்டுள்ளது: "உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன்."

**வசனம் 47.** இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டு, மூச்சு வாங்கப்

போராடிக் கொண்டு இருக்கையில், அவரது பேச்சு புரிந்துகொள்ளக் கடினமானதாக இருந்திருக்க வேண்டும். இயேசுவைப் பற்றி J. W. McGarvey அவர்கள் பின்வருமாறு கூறினார்:

> இப்போது அவர் சுமார் ஆறு மணிநேரம் சிலுவையில் தொங்கியிருந்தார், மற்றும் அவரது வலிவான பாடுகளினாலும் இரத்த இழப்பினாலும் உண்டாக்கப்பட்ட காய்ச்சல் கொண்ட தாகமும், சிலுவையில் கரங்கள் வெளியே விரித்து வைக்கப்பட்ட நிலையில் தொங்கியதால் விளைந்த, அவரது மார்புப்பகுதியின் தசைகளில் ஏற்பட்ட மாபெரும் வருத்தமும் ஒன்றுகூடி, வார்த்தை பேசுதலைக் கடினமானதாகவும் வித்தியாசப்படுத்த இயலாததாகவும் ஆக்கியிருக்க வேண்டும்.[15]

இயேசு "என் தேவனே" (*Eli*) என்று கதறியபோது, **அங்கே நின்றவர்களில் சிலர்** அவரது வார்த்தைகளைத் தவறாகப் புரிந்து கொண்டனர். அவர்கள், இவன் **எலியாவைக் கூப்பிடுகிறான்** என்று கூறினர். தீர்க்கதரிசியானவர் மரணத்தை அனுபவிக்கவில்லை என்பதாலும் (2 இராஜாக்கள் 2:11, 12) "எலியா" வருவார் என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டிருந்ததாலும் (மல்கியா 4:5), அவர் பூமிக்குத் திரும்பவும் வருவார் என்று யூதர்கள் முன்னெதிர் நோக்கினர் (11:14; 16:14; 17:3 ஆகிய வசனங்களில் மீதான விளக்கங்களைக் காணவும்). அடக்கப்பட்டுக் கொண்டிருந்த நீதிமான்களுக்கு எலியா உதவுவார் என்று அவர்கள் நம்பினர். இயேசு, மரணத்தில் இருந்து தம்மை விடுவிப்பதற்கும் தம்மைக் கொடுமைப் படுத்துபவர்களுக்கு நீதியைக் கொண்டுவரவும், அவர் எலியாவைக் கூப்பிட்டார் என்று, இயேசுவைத் தவறாகப் புரிந்து கொண்டவர்கள் நினைத்தனர்.

**வசனம் 48.** அங்கு நின்றிருந்தவர்களில் ஒருவரோ அல்லது போர்வீரர் ஒருவரோ, ஓடிப்போய் இயேசுவுக்கு பானம் கொடுத்தார். எலியா திரும்ப வந்தால், அவர் வலது பாரிசத்தில் இருக்க விரும்பினார் என்ற கருத்து முன்மொழியப் பட்டுள்ளது. அம்மனிதர் **கடற்காளானை எடுத்து, காடியில்** (*oxos*), **தோய்த்து எடுத்து, அதை ஒரு கோலில் மாட்டி** கர்த்தருடைய வாய்க்கு நேராக உயர்த்தினார். இது இயேசு "தாகமாயிருக்கிறேன்" என்று கூறியபின் நடந்தது என்பதில் சந்தேகம் இல்லை (யோவான் 19:28). கசப்புக்கலந்த காடியை குடிக்க அவர் மறுத்தார் (மத்தேயு 27:34) ஆனால் இந்தக் காடியை அவர் குடித்தார் (யோவான் 19:30). இந்த நிகழ்வு, "என் ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்தார்கள், என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக்கொடுத்தார்கள்" என்று கூறும் சங்கீதம் 69:21ன் வார்த்தைகளைப் பிரதிபலித்தது.

தரப்பட்ட பானம், மலிவான திராட்சரசமாக, தண்ணீருடன் கலக்கப்பட்டதாக, ரோமப் போர்வீரர்களால் பொதுவாகப் பயன்படுத்தப் பட்டதாக இருக்கலாம் (காண்க லூக்கா 23:36). அது மிகவும் நீர்த்ததாக இருந்ததால், அது இயேசுவின் தாகத்தைத் தணிக்க மாத்திரமல்ல ஆனால் அவர் பேசும்போது அதிகம் தெளிவாகவும் புரிந்துகொள்ளக் கூடியவகையிலும் கேட்கப்படும் அளவுக்கு அவரது உதடுகளை ஈரப்படுத்தவும் உதவியிருக்கும்.

**வசனம் 49.** இயேசு எலியாவைக் கூப்பிட்டிருந்தார் என்று நினைத்த **மற்றவர்கள்** அதிகம் முன்ஜாக்கிரதை உள்ளவர்களாக இருந்தனர். அவர்கள், **பொறு, எலியா இவனை இரட்சிக்க வருவானோ, பார்ப்போம்** என்று

*கூறினர். ஒருவேளை அவர்கள் உண்மையிலேயே தீர்க்கதரிசி திரும்பி வருவார் என்று விசுவாசித்து இருக்கலாம் அல்லது அவர்கள் இயேசுவை ஏளனம் செய்திருக்கலாம்.*

***வசனம் 50.*** *இதற்குப் பின்பு உடனடியாக,* ***இயேசு, மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டு,*** *"பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று கூறினார் (லூக்கா 23:46). "ஒப்புவித்தல்" அல்லது "ஒப்புக்கொடுத்தல்" என்பது "கொடுத்துவிடுதல் அல்லது ஒப்புவித்துவிடுதல்" என்று அர்த்தப்படுகிறது. இயேசு "மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்" என்பதற்கான குறிப்பு, அவர் "முடிந்தது!" என்று கூறிய அவரது வியப்புரையைக் குறித்திருக்க வாய்ப்புள்ளது (யோவான் 19:30). வெற்றியின் இந்தக் கூக்குரலைத் தொடர்ந்து, அவர் "தலையைச் சாய்த்து" (யோவான் 19:30)* ***ஆவியை விட்டார்.*** *அவர் செய்யும்படி இங்கு அனுப்பப்பட்டிருந்த பணி முடிவடைந்திருந்தது. இயேசு தம்மிடம் இருந்து எவரோருவரும் தமது ஜீவனை எடுக்க முடியாது, ஆனால் அதைத்தாமே கையளிப்பார் என்றும் மறுபடியும் அதைத் தாமே எடுத்துக் கொள்வார் என்றும் கூறியிருந்தார் (யோவான் 10:15-17). அவர் தமது ஆவியை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்ததன் மூலமும் மூன்று நாட்களுக்குப் பின்பு மரித்தோரில் இருந்து உயிர்த்து எழுந்ததன் மூலமும் அந்த வாக்குத்தத்தத்தைக் காத்துக்கொண்டார்.*

***வசனம் 51.*** *மதியம் 12:00 மணியில் இருந்து மாலை 3:00 மணி வரை, பூமியின் மீது இருள் சூழ்ந்தது (27:45). சிலுவையில் அறையப்பட்ட நிகழ்வுடன் துணையாக, இருள் என்ற இந்த கோட்பாட்டுடன் கூடுதலாக, மற்ற அற்புத நிகழ்வுகளும் நடந்தன. பரிசுத்த ஸ்தலத்தை மகாப்பரிசுத்த ஸ்தலத்தில் இருந்து பிரிக்கும்* ***தேவாலயத்தின் திரைச்சீலை*** *(காண்க யாத்திராகமம் 26:31-33; எபிரெயர் 9:3)* ***மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது.*** *மிஷ்னா என்ற புத்தகத்தின்படி, "இந்தத் திரையானது, எழுபத்து இரண்டு பாவுகளைக் கொண்ட தறியின்மீது நெய்யப்பட்டிருந்தது, மற்றும் ஒவ்வொரு பாவும் இருபத்து நான்கு நூல்களைக் கொண்டிருந்தது. இது நாற்பது முழங்கள் [அறுபது அடிகள்] நீளமும், இருபது முழங்கள் [முப்பது அடிகள்] அகலமும் கொண்டிருந்தது."[16] யோசிப்பஸ் அவர்கள் "இதை, நீலம் மற்றும் நேர்த்தியான சணல், மற்றும் இரத்தாம்பரம், மற்றும் நீலாம்பரம் ஆகியவற்றினால் நூல் வேலை செய்யப்பட்டிருந்த பாபிலோனியத் திரையாகும் மற்றும் இதன் வெளிப்புற அமைப்பு உண்மையிலேயே மிக உன்னதமானதாக இருந்தது என்று விவரித்தார்."[17]*

*திரை கிழிந்தது என்பது மத்தேயு சுவிஷேத்தில் விளக்கப்படாமல் விடப்பட்டிருந்தாலும், மாபெரும் முக்கியத்துவம் கொண்டதாகும். இது, லேவிய ஆசாரியத்துவம் மற்றும் பலிமுறைமைகள் கொண்ட பழைய உடன்படிக்கையின் முடிவைச் சுட்டிக்காண்பித்தது. இயேசுவின் தீர்க்கதரிசனத்தின்படி (24:1, 2), தேவாலயமே கி.பி. 70ல் அழிக்கப்பட்டது, அப்போது மிருகபலிகளுக்கு ஒரு முடிவு இடப்பட்டது. இயேசு மரித்தபோது திரை கிழிந்தது என்பது, அவரது பலியானது தேவனை அணுகுவதற்கு ஒரு புதிய மற்றும் பூரணமான மார்க்கத்தை அளிக்கிறது என்று சுட்டிக்காண்பிக்கிறது. எபிரெயருக்கு எழுதியவர், திரை என்ற உருவகத்தில், இயேசு நமது பெரிய பிரதான ஆசாரியராக இருப்பதாகக் காண்பித்தார்:*

அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது. நமக்கு முன்னோடினவராகிய இயேசு மெல்கிசேதேக்கின்முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத் *திரைக்குள் பிரவேசித்திருக்கிறார்* (எபிரெயர் 6:19, 20; வலியுறுத்தப்பட்டுள்ளது).

எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய *திரையின் வழியாய்* புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும்," என்றும் கூறினார் (எபிரெயர் 10:19, 20; வலியுறுத்தம் கூட்டப்பட்டுள்ளது).

திரை கிழிந்த நிகழ்வை F. F. Bruce அவர்கள், "இறையியல் முக்கியத்துவமான ஒரு நிகழ்வு" என்று அழைத்து பின்னர், "இயேசுவின் மரணத்தில் ... தேவன்தாமே நமக்கு திரைவிலகித் தோன்றியவராகிறார் மற்றும் அவரிடம் சென்று சேரும் வழியானது அகலமாகத் திறக்கப்பட்டுள்ளது" என்று கூறினார்.[18] இயேசுவின் பலியானது பழைய ஏற்பாட்டின் தடைகளை நீக்கிப்போட்டது; அது பலிகள் மற்றும் ஆணைகளின் யுகத்தை முடித்து வைத்தது மற்றும் அது தேவனுடைய பிரசன்னத்திற்குள்ளாகவே நாம் பிரவேசிப்பதற்கான வழியைத் திறந்து வைத்தது (காண்க கொலோசெயர் 2:14; எபிரெயர் 8:13).

இயேசு மரித்தபோது ஏற்பட்ட இன்னொரு அற்புதமான பூமியதிர்ச்சி என்பது **கன்மலைகளும் பிளக்கக்** காரணமாயிற்று. இந்த அற்புதத்தை மத்தேயு எடுத்துரைப்பு மாத்திரமே குறிப்பிடுகிறது. இந்த பூமியதிர்ச்சி என்பது தேவாலயத்தில் திரைச்சீலை கிழியக் காரணமாயிற்று என்று சிலர் காணுகின்றனர், ஆனால் வேதவசனம் இதைப்பற்றி எதுவும் குறிப்பிடுவதில்லை.

**வசனங்கள் 52, 53. கல்லறைகளும்** திறந்தன என்பது பூமியதிர்ச்சியின் நேரடி விளைவாக இருந்திருக்கலாம். இருப்பினும், மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுதல் என்பது ஒரு தனிப்பட்ட அற்புதமாக உள்ளது. இவ்வாறு உயிர்த்தெழுந்த மக்கள் இயேசுதாமே உயிர்த்தெழும் வரையிலும் **எருசலேம் நகரில்** காணப்படவில்லை என்றாலும், **நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது.** இந்தத் தனிநபர்கள் சற்றுக்காலத்திற்கு முன்னர்தாம் மரித்திருந்தனர் என்றும் அங்கிருந்த மற்றவர்களால் அறியப்பட்டிருந்தனர் என்றும் நாம் யூகிக்கலாம்; இல்லையென்றால் அவர்களைக் கண்டவர்கள்மீது அவர்கள் உயிர்த்தெழுந்ததின் முக்கியத்துவம் காணாமற்போயிருக்கும். அவர்கள் லாசருவைப் போன்று (யோவான் 11:43, 44; 12:2) வாழ்வில் தங்கள் முந்திய சூழ்நிலையைத் திரும்பப் பெற்றிருப்பார்கள்.

இருளானது இயேசுவைப் பாவம் சுமந்தவராகச் சுட்டிக்காண்பிக்கையில் (27:45) மற்றும் தேவாலயத்தின் திரைச்சீலை கிழிந்த நிகழ்வு, தேவனிடத்தில் சென்று சேர ஒரு புதிய அணுகுமுறையைச் சுட்டிக்காண்பிக்கையில் (27:51),

*இந்தப் பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதல், நித்திய ஜீவனுக்கென்று விசுவாசம் உள்ள யாவரும் உயிர்த்தெழ இருப்பதை முன்நிழல் இட்டது. கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலினால், எதிர்கால உயிர்த்தெழுதல் சாத்தியமாக்கப்படடது.*

***வசனம் 54. பூமியதிர்ச்சியும் - சம்பவித்த காரியங்களும்** - மற்றும் இயேசு மரித்த விதமும் ஆகிய யாவும் சேர்ந்து (மாற்கு 15:39) - சிலுவையில் அறைவதற்குப் பொறுப்பாளியாக இருந்த **நூற்றுக்கு அதிபதியை ஆழமாகப் பாதித்தன. அவைகள் இயேசுவைக் காவல் காத்திருந்த** மற்ற போர்வீரர்கள் மீதும் ஆழமான செயல்விளைவைக் கொண்டிருந்தன. மனக்கடினமுள்ள இந்த மனிதர்கள், அனேகமாக சிலுவையில் அறையப்படும் நிகழ்வுகளை நூற்றுக்கணக்கில் கண்டிருந்த இம்மனிதர்கள், **மிகவும் பயந்து: மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றார்கள்** (14:33; 16:16 ஆகிய வசனங்களின் விளக்கங்களைக் காணவும்). மாற்கு சுவிசேஷத்தில் இந்தக் கூற்று நூற்றுக்கு அதிபதிக்கு மாத்திரமே உரித்தாக்கப் பட்டுள்ளது (மாற்கு 15:39). இயேசுவின் தெய்வீகத்தில் அந்தப் போர்வீரர்கள் நம்பிக்கையை வெளிப்படுத்திய போது அவர் அவர்களை வழிநடத்தியிருக்க வேண்டும்.*

## *தூரத்தில் இருந்து கவனித்துக் கொண்டிருந்த பெண்கள் (27:55, 56)*

***55மேலும், இயேசுவுக்கு ஊழியஞ்செய்யும்படி கலிலேயாவிலிருந்து அவரோடே வந்திருந்த அநேக ஸ்திரீகள் அங்கே தூரத்திலே நின்று பார்த்துக்கொண்டிருந்தார்கள்.***

***56அவர்களுக்குள்ளே மகதலேனா மரியாளும், யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகியமரியாளும் செபெதேயுவின் குமாரருடைய தாயும் இருந்தார்கள்.***

***வசனம் 55.** இந்த வெள்ளிக்கிழமையன்று கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதை **அநேக ஸ்திரீகள்** கவனித்தனர் (மாற்கு 15:40, 41; லூக்கா 23:49; யோவான் 19:25-27). அவர்கள் **இயேசுவுக்கு ஊழியஞ்செய்யும்படி கலிலேயாவிலிருந்து அவரோடே வந்திருந்தனர்.** ஊழியம் என்பதற்கான (diakoneō) கிரேக்க வார்த்தை "அளித்தல்" அல்லது "பாரமரித்தல்" என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும். அவர்கள் தங்கள் நிதிகளில் இருந்து அவருக்கு உதவினர் (லூக்கா 8:1-3) அல்லது அவருக்கு உணவுகளை அவர்கள் தயார் செய்தனர் (லூக்கா 10:40) என்பது இங்கு கருத்தாக இருக்கலாம். ஒருவேளை இவ்விரண்டு செயல்களையும் அவர்கள் செய்திருக்கலாம்.*

*கெத்செமெனேயில் இருந்து ஓடிப்போன அப்போஸ்தலர்களைப் போலின்றி (26:56), தைரியமான இந்தப் பெண்கள் இயேசுவுக்குப் பற்றுறுதியுடன் நிலைத்திருந்தனர். அன்பினால் தூண்டப்பட்டிருந்த இவர்கள், முடிவு வரையிலும் அவருக்குச் சமீபத்தில் இருப்பதற்காக, தங்கள் சொந்த கௌரவத்தையும் பாதுகாப்பையும் கைவிட மனவிருப்பம் கொண்டிருந்தனர். அவர்கள் **தூரத்தில்** நின்று இருந்தனர், ஆனால் இந்த உண்மை, பயம் என்று*

எடுத்துக்கொள்ளப் படலாகாது. ரோமர்கள் அனேகமாக, சிலுவையினிடத்தில் மக்கள் - குறிப்பாக அவர் மீது பரிவிரக்கமாக இருந்தவர்கள் - மிகவும் நெருங்கி வராதபடிக்கு, அதைச் சுற்றிலும் ஒரு வட்டத்தை வரைந்து குறித்திருப்பார்கள். இயேசு, துன்புற்று தமது கண்களை, சிலுவைக்கு அருகில் இருந்த வெறுப்பூட்டும் காட்சிகளில் இருந்து விலக்கி இந்த விசுவாசமான பெண்கள் தமது மரணத்தைக் குறித்துப் புலம்புவதை கண்ணோக்குதல் என்பது அவருக்கு எவ்வளவு ஆறுதலைக் கொடுத்திருக்கும்!

**வசனம் 56.** மத்தேயு சுவிசேஷத்தில் இந்தப் பெண்கள் ஒரு அற்புதமான பட்டியலை ஏற்படுத்துகின்றனர். முதலாவது வருபவள் **மகதலேனா மரியாள்,** இவள் மகதலா நாட்டில் இருந்து வந்தவள் என்பதை இவளது பெயர் சுட்டிக்காண்பிக்கிறது (15:39ன் மீதான விளக்கங்களைக் காணவும்). லூக்கா 8:2ன் படி, இவளிடத்தில் இருந்த ஏழு அசுத்த ஆவிகளை இயேசு துரத்தியிருந்தார். அவருக்கு இவள் தன்னை ஒப்புக்கொடுத்தது என்பது, இவளது வாழ்வில் அவர் செய்திருந்தவற்றிற்கு இவளது நன்றிநிறைவின் வெளிப்பாடாக இருந்தது (27:61; 28:1 ஆகியவற்றின் மீதான விளக்கங்களைக் காணவும்).

இன்னொரு **மரியாளும்** குறிப்பிடப் பட்டிருக்கிறாள்; **இவள் யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாக இருந்தாள்.** இவளை மாற்கு 15:40ம் வசனம், "சின்ன யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும்" என்று அடையாளப் படுத்துகிறது. இவள் யோவான் 19:25ல் குறிப்பிடப்படும் கிலேயோப்பாவின் மனைவியாக இருக்கலாம்.

**செபெதேயுவின் குமாரருடைய, அதாவது யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோருடைய தாயும் என்பது** அடுத்து பெயரிடப்பட்ட பெண்ணாகும் (4:21, 22 ஆகியவற்றின் மீதான விளக்கங்களைக் காணவும்). மாற்கு சுவிசேஷத்தில் இவள் சலோமே என்று அடையாளப்படுத்தப் பட்டிருக்கிறாள் (மாற்கு 15:40; 16:1). இவள் தனது மகன்களின் சார்பாக இயேசுவை அணுகி, அவரது இராஜ்யத்தில் அவர்களுக்கு கனத்திற்குரிய இடங்களை நாடியவளாக இருந்தாள் (20:20-23).

லூக்கா 23:49 ன்படி, மற்றபடி "அவருக்கு அறிமுகமானவர்களெல்லாரும்" "தூரத்திலே நின்று இவைகளைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்." யோவான் 19:26, 27 இயேசுவின் தாயாகிய மரியாள் அன்பான சீஷரான யோவானுடன் "அருகே நின்றாள்" என்று சுட்டிக்காண்பிக்கிறது.

இயேசுவைப் பின்பற்றியவர்கள், அவர் மரிப்பார் என்று - குறிப்பாக இவ்விதமாக அவர் மரிப்பார் என்று - ஒருக்காலும் எதிர்பார்த்து இருக்கவில்லை என்பதால், அவிசுவாசமும் திகைப்பும் அடைந்தவர்களாக அங்கு நின்றிருந்தனர். அவரது மரணத்தைப் பற்றி இனியும் எந்த சந்தேகமும் இல்லை என்றானபோது, ஒருசில பெண்களைத்தவிர (27:61; லூக்கா 23:55), அவர்களில் பெரும்பான்மையானவர்கள், அவருடன் தங்கள் நம்பிக்கைகளும் மரித்திருந்தன என்று நினைத்து, ஏமாற்றமும் இருதய பலவீனமும் கொண்டவர்களாகத் திகைத்துப் புறம்பே சென்றனர்.

## சிலுவையை இயேசு மனப்பூர்வமாக எதிர்கொண்டார் (27:33-50)

*சிலுவையைப் பற்றி நாம் எவ்வளவு அதிகமாகக் கற்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம், நமது மீட்பர் நமக்காகச் செய்த தியாகத்திற்காக அவரை அன்புகூருபவர்களாகிறோம். நாம் சிலுவையைப் பற்றிப் படிக்கையில், சிலுவையில் அறையப்படுதல் என்பது ஒரு தவறு அல்லது விபத்து என்பதாக இல்லை என்பது பற்றி ஆழமான கருத்து உறுதிப்பாட்டிற்கு நாம் வரவேண்டும். சிலுவை என்பது தேவனுடைய நித்திய நோக்கத்தின் பகுதியாக இருந்தது. எருசலேமின் மலைப்பகுதியில் சிலுவை நடப்படுவதற்கு நீண்டகாலம் முன்னதாகவே, தேவனுடைய இருதயத்தில் சிலுவை இருந்தது (காண்க எபேசியர் 1:3, 4; 2 தீமோத்தேயு 1:9; 1 பேதுரு 1:19, 20).*

*முற்றான நீதியையும் அதே வேளையில் நம்மீது தமது அன்பையும் தேவன் செயல்விளக்கப்படுத்தக்கூடிய மேன்மையான வழியாக இருந்தது என்ன (ரோமர் 3:24-26)? பிதாவின் சித்தத்தின்படி செய்யவே இயேசு வந்தார் என்பதால், சிலுவையை அவர் ஒரு அத்தியாவசியமானதாகக் கண்ணோக்கினார் (16:21-23). அவர் தம்மைத் தேவனுடைய ஊழியக்காரராகக் கண்டதால், மனப்பூர்வமாக சிலுவையை ஏற்றுக்கொண்டார்.*

## இயேசுவை சிலுவையில் பற்றியிருந்தது என்ன? (27:40)

*ரோமப் போர்சேவகர்கள் இயேசுவைச் சிலுவையில் இட்டபோது, அவரது கரங்களில் ஆணிகளை அடித்தனர் (காண்க யோவான் 20:25), ஆனால் மற்றவர்கள் “நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கிவா” என்று கூறியபோது (27:40) அவரை அங்கேயே இருக்கும்படி செய்தது எது? அவரை அங்கே பற்றிப்பிடித்துக் கொண்டிருந்தவை ஆணிகள் அல்ல (26:53; யோவான் 10:17, 18). ஆனால் பிதாவின் சித்தமே (26:39). இயேசு மரணபரியந்தம் சிலுவையில் இருக்க வேண்டும் என்பது தேவனுடைய நித்திய நோக்கமாக இருந்ததால் அவர் அவ்வாறு செய்தார் (பிலிப்பியர் 2:5-11). அவர் “தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு” சிலுவையைச் சகித்தார் (எபிரெயர் 12:2). நமது சார்பாக நிகழ்த்தப்பட்ட அன்பின் இந்த மாபெரும் காட்சிக்குப் பதிலுரையாக, தேவன்மீதும் கிறிஸ்துவின் மீதும் நமது அன்பானது, நமது பாதையில் சாத்தான் எவ்விதமான தடைகளை வீசியெறிந்தாலும், நாம் தேவனுடைய இராஜ்யத்தில் நிலைத்திருக்கக் காரணமாக வேண்டும்.*

## சிலுவையின் மீது இயேசுவின் ஏழு கூற்றுகள் (27:46)

*இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது கூறியவற்றில் ஒரே ஒரு கூற்றை மாத்திரமே மத்தேயு பதிவு செய்தார். இருப்பினும் எல்லா சுவிசேஷ விபரங்களும் பரிசீலிக்கப்படும்போது, மொத்தம் ஏழு கூற்றுகளை நாம்*

கண்டறிகிறோம்:

1. "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" (லூக்கா 23:34).
2. "இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்" (லூக்கா 23:43).
3. " 'ஸ்திரீயே, அதோ, உன் மகன்!' ... 'அதோ, உன் தாய்!' " (யோவான் 19:26, 27).
4. "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" (மத்தேயு 27:46; மாற்கு 15:34).
5. "தாகமாயிருக்கிறேன்" (யோவான் 19:28).
6. "முடிந்தது" (யோவான் 19:30).
7. "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" (லூக்கா 23:46).

டேவிட் ஸ்டீவர்ட்

## "பரதீசு என்றால் என்ன?" (27:50)

வெள்ளிக்கிழமை இரவு முதல் ஞாயிற்றுக்கிழமை காலை வரையில் மூன்று நாட்களின் பகுதியின்போது, இயேசுவின் ஆத்துமா ஏதோ ஒரு இடத்தில் இருந்தது. எங்கே? அவர் தமது ஆவியை பிதாவின் கரங்களில் ஒப்புவித்திருந்தபோதிலும் (லூக்கா 23:46), அந்த வேளையில் அவர் பரலோகத்திற்கு திரும்பிச் சென்றிருக்கவில்லை (யோவான் 20:17). மனஸ்தாபப்பட்ட கள்ளனிடத்தில், "இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்" என்று அவர் கூறியிருந்தார் (லூக்கா 23:43). "பரதீசு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*paradeisos*) கிரேக்க வார்த்தை, "அழகிய தோட்டம் அல்லது பூங்கா" என்று அர்த்தப்படுகிறது, ஆனால் பரதீசு எங்கு உள்ளது? இயேசு கல்லறையைப் பற்றிப் பேசவில்லை என்பது நிச்சயம்; ஏனெனில் இருளான, ஈரமான கல்லறை பரதீசாக இருப்பதில்லை.

மாம்சப்பிரகாரமான வாழ்விற்கும் மக்களின் ஆத்துமாக்களினுடைய நித்திய அடைவிடத்திற்கும் இடையில் உள்ள ஒரு இடை நிலையைப் புதிய ஏற்பாடு வெளிப்படுத்துகிறது. இந்த இடத்திற்கு "Hades" "பாதாளம்" என்று பெயர். இது, காணப்படாத, மரித்த, உருவமிழந்த ஆவிகளின் இடமாக உள்ளது. ஆத்துமாவிற்கான இந்தத் தற்காலிகத் தங்குமிடம், ஐசுவரியவான் மற்றும் லாசரு ஆகியோரின் உவமையில் இயேசுவினால் விவரிக்கப் பட்டது (லூக்கா 16:19-31).

நீதிமானும் அநீதியானவரும் ஆகிய இருசாராருமே பாதாளத்திற்குச் செல்கின்றனர், ஆனால் அங்கு ஒரே இடத்திற்கு இருவரும் செல்வதில்லை. இயேசுவின் உவமையில், பிச்சைக்காரரான லாசரு ஆபிரகாமின் மடியில் தேற்றப்பட்டார், அதே வேளையில் ஐசுவரியவான் "வேதனை"யில் இருந்தார் (லூக்கா 16:22, 23). இவ்விருவரும் பெரும்பிளப்பு ஒன்றினால் பிரிக்கப்பட்டிருந்தனர் (லூக்கா 16:26). இயேசு மரித்தபோது அவர் பரதீசுக்குச் சென்றார் (லூக்கா 23:43). எனவே (Hades) பாதாளம் என்பது இரு அறைப்பிரிவுகளைக் கொண்டுள்ளது, அவற்றில் ஒன்று வேதனைக்கானதாகவும் இன்னொன்று தேற்றப்படுதலுக்கானதாகவும் உள்ளது. உயிர்த்தெழுதலின்

*நாளில் பாதாளம் தன்னில் உள்ள மரித்தோரை ஒப்புக்கொடுக்கும் (வெளிப்படுத்தின விசேஷம் 20:13). வேதனையில் இருப்பவர்கள் நகரத்திற்குள் தள்ளப்படுவார்கள், பரதீசில் இருப்பவர்கள் பரலோகம் செல்லுவார்கள்.*

---

*குறிப்புகள்*

*[1]நேர்க்குத்தான கட்டை சிலுவையில் அறையப்படும் இடத்தில் தரையிலேயே அடிக்கடி விடப்பட்டிருந்தது. அந்த இடத்திற்குச் சென்று சேரும்போது, ஆக்கினைத்தீர்ப்புக்குள்ளான நபரின் கரங்கள் குறுக்குக் கட்டையில் ஆணியடிக்கப்பட்டு அல்லது கட்டப்பட்ட பின்பு அது உயர்த்தப்பட்டு நேர்க்குத்தான கட்டையுடன் இணைக்கப்பட்டது, அதன்பின்பு அந்த நபரின் பாதங்கள் நேர்க்குத்தான கட்டையுடன் ஆணியினால் அடித்து இணைக்கப்பட்டன.* [2]Plutarch *Moralia* 554B. [3]Josephus *Against Apion* 2.4. [4]Michael J. Wilkins, "Matthew," in *Zondervan Illustrated Bible Backgrounds Commentary*, vol. 1, *Matthew, Mark, Luke,* ed. Clinton E. Arnold (Grand Rapids, Mich.: Zondervan, 2002), 178; David F. Payne, "Golgotha," in *The International Standard Bible Encyclopedia,* rev. ed., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 2:523–24. [5]Talmud *Sanhedrin* 43a; *காண்க* Prov. 31:6. [6]Jack P. Lewis, *The Gospel According to Matthew,* Part 2, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 162; Metzger, 57–58, 153. [7]Leon Morris, *The Gospel according to Matthew,* Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 717. [8]G. Bertram, "paízō," in *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittel and Gerhard Friedrich, abr. and trans. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 758. *[9]சங்கீதம் 22ன் முந்திய வசனம் தலையைத் துலுக்கியதைக் குறிப்பிடுகிறது (27:39ன் மீதான விளக்கங்களை காணவும்). [10]சாலொமோனின் ஞானம் 2:17-20 ஐக் காணவும்.*

*[11]போர்வீரர்கள் அடங்கிய நான்காவது குழுவை லூக்கா குறிப்பிட்டார் (லூக்கா 23:36, 37). [12]சுவிசேஷ விபரங்களைக் குறிப்பிட்ட ஓரிகன், கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட போது ஏற்பட்ட இருளில் வரலாற்றுத்துவம் பற்றி அடிக்கோடிட்டார்.* (Origen *Against Celsus* 2.33.) *இந்தப் பாரம்பரிய வரலாறு, பொந்தியு பிலாத்துவினால் எழுதப்பட்டது என்று உரிமைகோரப்படும் ஒரு வரைவு கடிதத்திலும் பாதுகாக்கப்பட்டுள்ளது.* (*Letter of Pilate to Tiberius*.) [13]Tertullian *Apology* 1.21. [14]John MacArthur, Jr., *The MacArthur New Testament Commentary: Matthew 24—28* (Chicago: Moody Press, 1989), 270. [15]J. W. McGarvey, *The New Testament Commentary,* vol. 1, *Matthew and Mark* (N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 246. [16]Mishnah *Shekalim* 8.5. [17]Josephus *Wars* 5.5.4. [18]F. F. Bruce, *The Epistle to the Hebrews*, New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 246.